00015

සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

இலங்கைப் பொறியியல் சேவை உத்தியோகத்தர்களுக்கான

முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019 (II)

SLES

| காலம் - 03 மணித்தியாலங்கள் | நிதி முறைகள் (05-I)<br>Financial Systems (05-I) | විභාග අංකය<br>Index No / சுட்டெண்<br>........................................ |
|---|---|---|

- ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

1. அ) 'திரட்டு நிதியம்' என்றால் என்ன என்பதை கூறி அந்த நிதியம் தொடர்பிலான அரசியலமைப்பு ஏற்பாடுகளை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ) 'விசேட நிதியதிச் சட்ட நிதியம்' என்றால் என்ன என்பதை கூறி அந்த நிதியம் தொடர்பில் நி.ஒ. 2(4) இன் மூலம் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

2. உங்கள் அமைச்சினால் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள நீர்ப்பாசனத் கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட தொடக்கச் செலவு ரூ. 1500 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின்,

   அ) கருத்திட்ட வகைப்படுத்தலின் கீழான, இக் கருத்திட்டத்தின் வகை மற்றும் இவ் வகை கருத்திட்டத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நடைமுறையை விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ) நி.ஒ. 20 மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை 01/2019 இன் படி திருத்தப்பட்டவாறாக குறித்த கருத்திட்டத்திற்கான நிதி செலவு மதிப்பீடுகளை தயாரிப்பதில் நீங்கள் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகளை விளக்குங்கள். (10 புள்ளிகள்)

3. அ) புதிய கட்டிட வேலைகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பில் செலவு செய்யும் போதான அதிகாரங்கள் மற்றும் மட்டுப்பாடுகளை நி.ஒ. 93 இற்கமைய விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ) பொறுப்புக்களுக்குள்ளாதல் (கொடுக்கப்பட வேண்டிய கடன்) என்பதன் கீழான பொதுவிதி மற்றும் ஆண்டுதோறும் மீண்டுவரும் வழங்கல்கள் தொடர்பில் நி.ஒ. 94 இற்கமைய விளக்குக. (10 புள்ளிகள்)



41

4. அ) ஒரு ஒப்பந்தத்தைப் பொறுத்தமட்டில் நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தினைத் திருப்பிச் செலுத்துவது தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், வைப்புப் பணத்தினை மீளச் செலுத்துதலை அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் பொறுப்புக்களாக நீங்கள் கருத்தில் கொள்ளும் விடயங்கள் எவை? (10 புள்ளிகள்)

ஆ) யாதேனும் அபிவிருத்தி பணிகளுக்கு அமைய நாட்கூலித் தொழிலாளர்களைப் பயன்படுத்தும் விடயத்தில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரி என்ற ரீதியில் நீங்கள் கவனத்தில்கொள்ளும் விடயங்களை நிதி ஒழுங்கு விதிகளுக்கமைய குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

5. அ) வருடாந்த பொருள் இருப்புச் சுற்றாய்வுச் சபை (Annual Board of Survey) மற்றும் ஒப்பாய்வு செய்வதற்கான சுற்றாய்வுச் சபை (Board of Survey for Verification) என்பவற்றை வேறு வேறாக விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) இருப்புப் பொருள் விதிகள் (Store Rules) என்றால் என்ன? இருப்புப் பொருள் விதிகளில் நீங்கள் உள்ளடக்க எதிர்பார்க்கும் விடயங்களைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

6. ரூ.500 மில்லியன் முழு மதிப்பீட்டில் 50 டபுள் கேப் (double cab) வாகனங்கள் வாங்குவதற்கான பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வரும் சந்தர்ப்பத்தில்,

அ) இந்த பெறுகைச் செயற்பாட்டிற்கு தங்களால் தெரிவு செய்யப்படும் பெறுகை முறை எது என்பதைக் குறிப்பிட்டு அதற்கு ஏதுவான விடயங்களைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

ஆ) இந்தப் பெறுகைச் செயற்பாடு தொடர்பாக எந்த மட்டத்திலான பெறுகைக் குழு கையாள வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு அம்மட்டத்திலான பெறுகைக் குழுக்கு ஏற்புடைய ஒப்பந்த அளிப்பு (AWARD OF CONTRACT) தொடர்பான ஏற்பாடுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

*************